T

# முதல் திருப்புதல் தேர்வு, ஜனவரி - 2020

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | வணிகவியல் | மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

2. கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து விடைகுறியீட்டுடன் விடையையும் எழுதவும். 20×1=20

1) பரந்த அளவு வீச்செல்லையில் அதிகார படிநிலை மட்டங்களின் அளவு _______

அ) அதிகம் ஆ) பன்மடங்கு இ) குறைவு ஈ) கூடுதல்

2) குறியிலக்கு மேலாண்மை செயல்முறையின் முதல்நிலை எது?

அ) முக்கிய முடிவுப்பகுதியை நிர்ணயிப்பது

ஆ) முக்கிய நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது

இ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

ஈ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது

3) மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர் _______ ஆவார்.

அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ) நிதிநிறுவனங்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

4) குறுகிய கால நிதி ஆதாரங்களை ஏற்படுத்துவதற்காக பணச்சந்தையில் நிறும அமைப்புகள் வெளியிடும் கடன் ஆவணங்கள் _______ என்று அழைக்கப்படுகிறது.

அ) கருவூல இரசீது ஆ) வணிக இரசீது

இ) வணிகத்தாள் ஈ) அரசுப் பத்திரங்கள்

5) _______ வகை ஊக வணிகர் பத்திரங்களின் விலையேற்றத்தையும் _______ வகை ஊக வணிகர் பத்திரங்களின் விலை குறைவையும் எதிர்பார்ப்பார்கள்.

அ) கரடி, காளை ஆ) காளை, கரடி

இ) காளை, கலைமான் ஈ) கலைமான், முடவாத்து

6) பங்குச்சந்தைக்கான விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி தரும் அமைப்பு

அ) ரிசர்வ் வங்கி ஆ) மத்திய அரசு இ) செபி ஈ) தேசிய பங்குச்சந்தை

7) பெரிய நிறுவனங்களின் தொழில் மூலதனத்தில் பங்கேற்க சிறிய முதலீட்டாளர்களுக்கு உதவுவது _______

அ) பங்குகள் ஆ) பரஸ்பர நிதி

இ) கடனீட்டு பத்திரங்கள் ஈ) நிலைவைப்புகள்

8) ஒருவரின் உள்ளார்ந்த திறனைக் கண்டறிய செய்யப்படும் சோதனை _______

அ) தகுதி பரிசோதனை ஆ) மனப்பான்மை பரிசோதனை

இ) உடல் பரிசோதனை ஈ) நிபுணத்துவ பரிசோதனை

9) உலோகச் சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?

அ) ஒழுங்குமுறை ஆ) பரிவர்த்தனை இ) பொருட்கள் ஈ) காலம்

10) நுகர்வோர் பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுவது

அ) ஏப்ரல் 15 ஆ) மார்ச் 15 இ) ஆகஸ்டு 15 ஈ) செப்டம்பர் 15

11) முன்னர் பொதுத்துறைக்கு என ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார்துறை அமைப்பதற்கு அனுமதிப்பது ______ ஆகும்.

அ) தாராளமயமாக்கல் ஆ) தனியார் மயமாக்கல்

இ) உலகமயமாக்கல் ஈ) பொது நிறுவனம்

12) சரக்கு விற்பனை சட்டத்தில் சரக்கு என்ற பொருளில் அடங்காதது ______ ஆகும்

அ) சரக்கிருப்பு ஆ) கொடுபட வேண்டிய கூலி இ) பயிர் ஈ) தண்ணீர்

13) பின்வருவனவற்றுள் சரியானது எது?

1. காசோலை ஒரு வங்கியர் மீது வரையப்படுவது
2. காசோலை மூன்று படிகள் தயாரிக்கப்படுகிறது
3. காசோலையை கீறலிட முடியாது
4. காசோலைக்கு சலுகை நாட்கள் தரப்படுவதில்லை

அ) 1 மற்றும் 2 மட்டும் ஆ) 3 மற்றும் 4 மட்டும்

இ) 1 மற்றும் 4 மட்டும் ஈ) 1 மற்றும் 3 மட்டும்

14) பொருத்துக

| | |
|---|---|
| 1. தெளிவான தொழில்முனைவோர் - | i) அரசு தரும் சலுகை மற்றும் மானியங்களால் தூண்டப்படுகின்றன. |
| 2. தன்னிச்சை தொழில்முனைவோர் - | ii) முயல் வளர்ப்பு, மீன்பண்ணை |
| 3. தூண்டப்பட்ட தொழில்முனைவோர்- | iii) உளவியல், பொருளாதார காரணிகளால் |
| 4. வேளாண் தொழில்முனைவோர் - | iv) புதிய தொழில்களை துவக்க இயற்கையாகவே தூண்டப்படுபவர் |

குறியீடு

அ) 1-ii, 2-iii, 3-i, 4-iv ஆ) 1-iii, 2-iv, 3-i, 4-ii

இ) 1-i, 2-ii, 3-iii, 4-iv ஈ) 1-iv, 2-iii, 3-ii, 4-i

15) இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்கு வடிவமைக்கப்பட்டது ______

அ) அடல் புதுமை புகுத்துதல் திட்டம் ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

இ) டிஜிட்டல் இந்தியா ஈ) வளர்ச்சி அறிக்கை திட்டம்

16) பங்குத் தொகுதியை ______ நிறுமம் மட்டுமே வெளியிட முடியும்.
அ) தனியார் ஆ) பொது இ) ஒரு நபர் நிறுமம் ஈ) சிறு

17) நிறுமச் சட்டம் 2013 ______ ல் பங்குகள் வெளியிடுவதை தடை செய்துள்ளது.
அ) முனைமத்தில் ஆ) முகமதிப்பில்
இ) தள்ளுபடியில் ஈ) முகமதிப்பு மற்றும் முனைமத்தில்

18) ______ இயக்குநர்களுக்கு குறைந்த அளவிலான பங்குகளை வைத்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது.
அ) இயக்குனர் குழுவால் நியமிக்கப்படும் ஆ) மத்திய அரசு நியமிக்கும்
இ) மேலாண்மை இயக்குனரால் நியமிக்கப்படும் ஈ) பங்குனர்கள் நியமிக்கும்

19) ஒரு சிறப்பு தீர்மானத்தை நிறைவேற்ற ______ சதவீத பங்குனர்கள் வாக்களிக்க வேண்டும்.
அ) அனைத்து ஆ) 90 இ) 75 ஈ) 51

20) சட்டமுறைக் கூட்டம் ______ மாதத்திற்கு மேலிருந்து ______ மாதத்திற்குள் கூட்டப்பட வேண்டும்.
அ) 6, 15 ஆ) 1, 6 இ) 15, 18 ஈ) 12, 15

## பகுதி - II

1. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
2. வினா எண்.30ற்கு கட்டாயம் விடையளிக்கவும். **7×2=14**

21) மேலாண்மை என்றால் என்ன?
22) விதி விலக்கு மேலாண்மையின் பொருள் தருக.
23) மூலதனச் சந்தை என்றால் என்ன?
24) பங்குச் சந்தை வரைவிலக்கணம் தருக.
25) நுகர்வோர் என்பவர் யார்?
26) தனியார்மயமாக்கல் என்றால் என்ன?
27) மாற்றுச்சீட்டு வரையறு.
28) அகதொழில் முனைவோர் என்பவர் யார்?
29) மாற்று இயக்குநர் என்பவர் யார்?
30) உலகமயமாக்கலின் தாக்கங்கள் ஏதேனும் 2 தருக.

## பகுதி - III

1. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
2. வினா எண்.40 கட்டாயம் வினாவாகும். **7×3=21**

31) மேலாண்மை வரைவிலக்கணம் தருக.
32) மான் மற்றும் முடவாத்து விளக்குக.

33) ஆட்சேர்ப்பு செயல்பாட்டில் உள்ள படிநிலைகளைக் கூறுக.

34) சந்தையிடுகை கலவை யாவை? ஏதேனும் இரண்டு கூறுகளை விளக்கவும்.

35) மாற்றுச்சீட்டு கடனுறுதிச்சீட்டு வேறுபடுத்துக. (ஏதேனும் 3)

36) தொழில் முனைவோரின் வணிகப்பணிகளை பட்டியலிடுக.

37) பங்குகளை முனைமத்தில் வெளியிடல் - குறிப்பு வரைக.

38) தொழில் முனைவோர் மற்றும் மேலாளரை வேறுபடுத்துக.

39) சமூக சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை?

40) சென்னையில் உள்ள ஒரு நிறுமம் தனது மேலாளரை பயிற்சிக்காக டெல்லிக்கு அனுப்புகிறது. மேற்கண்ட நிகழ்வில் அப்பயிற்சியின் வகை என்ன? விளக்குக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7×5=35**

41) அ) மேலாண்மையை , நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (அல்லது)

ஆ) நிதிச்சந்தையின் பணிகள் யாவை?

42) அ) மனித வள மேலாண்மையின் முக்கியத்துவம் யாது? (ஏதேனும் 5)

(அல்லது)

ஆ) வணிக சுற்றுச்சூழலை புரிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்குக.

43) அ) பங்குச் சந்தையின் சமுதாய மற்றும் நிறுவனத்திற்கான பயன்களை விவரி?

(அல்லது)

ஆ) பணியமர்தல் கொள்கைகளை விளக்குக.

44) அ) நுகர்வோர் பாதுகாப்பில் வணிகத்தின் பங்கினை விளக்குக. (அல்லது)

ஆ) விற்பனை மற்றும் விற்பனை ஒப்பந்தத்தை வேறுபடுத்துக.

45) அ) மாற்றுமுறை ஆவணத்தின் எடுகோள்ள் யாவை? (அல்லது)

ஆ) தொழில் முனைவோரின் தோற்றுவிப்பு பணிகளை விளக்குக.

46) அ) முதல்நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தை வேறுபடுத்துக.

(அல்லது)

ஆ) ஏதேனும் ஐந்து வகை இயக்குநர்கள் பற்றி எழுதுக.

47) அ) குறிப்பு வரைக. 1) சாதாரணத் தீர்மானம் 2) சிறப்புத் தீர்மானம் 3) சிறப்பு அறிவிப்பு தேவைப்படும் தீர்மானம் (அல்லது)

ஆ) இயக்குனரின் அதிகாரங்களை கூறுக.

*******